நாள்: 02.07.2026
HMOP 23/23
பெயர் நீனு
எ.ம.சா.1

<u>**குறுக்கு விசாரணை**</u>

நான் B.E,M.E.,முடித்து விட்டு சட்டப்படிப்பு முடித்துள்ளேன். நான் இளநிலை வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். எனக்கு 28.10.2012 ல் திருமணம் நடைபெற்றது. திருமண வாழ்வின் பயனாக ஷருனுஜா, ருத்ரஜா என்ற இரு பெண்குழந்தைகள் உள்ளனர். முதல் குழந்தை பிறந்தவுடன் 2 ஆண்டுகள் பிரிந்த வாழ்ந்தோம், இரண்டாவது குழந்தை பிறந்தவுடன் 5 ஆண்டுகள் பிரிந்த வாழ்ந்து வருகிறோம். ம.சா.ஆ.4 04.12.2020 ம் வழக்கறிஞர் அறிவிப்பை நான் தான் அனுப்பினேன். என் 2 வது மகளை கொலை செய்யவேண்டும் என நினைத்ததால் அனுப்பினேன். எந்த தேதியில் என் கணவர் மிரட்டினார் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் மிரட்டினார்.

ம.சா.ஆ.4 ல் திருமணத்திற்கு எனக்கு 50 பவுன் நகை போட்டுள்ளார்கள் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் எதிரூரையில் 100 பவுன் நகை போட்டார்கள் என்றால் சரிதான். திருமண நிச்சயதார்த்தத்தின்போது என் கணவர் எனக்கு 10 பவுன் தங்க நகை போட்டார் என்றால் சரிதான் ஆனால் என் மாமியார் அந்த 10 பவுனை திரும்ப பெற்றுக்கொண்டார். வழக்கிற்காக 10 பவுன் நகையை என் மாமியார் பெற்றுக்கொண்டார் என்பது பொய் என்றும், இன்று வரை 10 பவுன் என் கைவசம் தான் உள்ளது என்றால் சரியல்ல. சின்னமனூர் அண்ணா அரசு உதவி பெறும் பள்ளியில் என் மகள்கள் படித்து வருகிறார்கள். குழந்தையை பார்க்க நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னர் தான் நான் பார்க்க அனுமதித்தேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு என் கணவர் என் குழந்தைகளை பார்க்க வரவில்லை.

எ.ம.சா.ஆ.9 ஆவணத்தை நான் தான் தாக்கல் செய்தேன். குழந்தைகளை பார்க்க என் கணவர் வந்தபோது நான் அதை தடுத்து என் கணவர் மீது எ.ம.சா.ஆ.9 புகார் பொய்யாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. DVC வழக்கு 2024 ல் தான் பதிவு செய்யப்பட்டது. ஆனால் எ.ம.சா.ஆ.9 புகார் 2021 ல் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிருரை 9 வது பத்தியில் விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறேன் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் உயிருக்கு பாதுகாப்பு இல்லாததால், நகை, பொருட்களை கொடுத்துவிட்டு என் மகளுக்கு ஆயுட்கால ஜீவனாம்சம் கொடுத்தால் விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறேன். எ.ம.சா.ஆ.3, 6,9,10 ஆகிய ஆவணங்கள் புகைப்படங்கள் என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் சாட்சிய சட்டம் நடைமுறையின் கீழ் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இதுவரை 3 முறை என் கணவர் மீது புகார் கொடுத்துள்ளேன்.

இந்நீதிமன்ற உத்தரவுப்படி இடைக்கால ஜீவனாம்ச தொகை பெற்று வருகிறேன். உத்தமபாளைய நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் DVC வழக்கில் ஜீவனாம்சம் உத்தரவாகியுள்ளது என்றால் நீதிமன்ற உத்தரவுப்படி என் கணவர் நடக்கவில்லை. என் கணவர் மீது FIR போடவில்லை என்றால் சரிதான். அவரக்கு ஆள்பலம்,அதிகார பலம் இருந்ததால் காவல் துறை பதிவு செய்யவில்லை. என் கணவர் மீது நான் கொடுத்தபுகார் மீது 3 CSR பதிவுகள் எனது வழக்கறிஞர் அதிகாரத்தை பயன்படுத்தி தான் வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் என்கணவருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளேனா என்றால் எனக்கும், என் குழந்தைகளுக்கும் பயமாகவும் உள்ளது, விருப்பமும் இல்லை. நான்

பயப்படும் அளவுக்கு என் கணவர் எந்த குற்றத்தையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நோட்டீஸில் உள்ள நகை விவரத்துக்கும், எதிருரையில் சொல்லியுள்ள நகை விவரத்துக்கும், முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH

Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.02 19:18:13 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்